1981 மார்ச் 2

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) வேலூர் நகர குடிநீர் அபிவிருத்தி திட்டத்தின், திருத்திய மதிப்பீடு ரூ. 129.27 இலட்சங்கள்.

(ஆ) ஜூன் 1980 இறுதிவரை மொத்தச் செலவு ரூ. 126.91 இலட்சங்கள்.

(இ) 1981 ஆம் ஆண்டு மார்ச் இறுதிக்குள் இத் திட்ட வேலைகள் முடிவடையலாம்.

திரு. இல. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின்கீழ் வழியோர கிராமங்கள் மணவூர், கருகாபுத்தூர், செம்பாக்கம் போன்ற கிராமங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, வழியோர கிராமங்களில் சில சேர்க்கப்பட்டிருந்து, இப்போது அவைகள் சேர்க்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணி

*வினா எண் 331—திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிசைமாற்று வாரியப் பகுதிகளில் சுகாதாரப் பணிகளுக்காக வெளிநாட்டு நிறுவனங்கள் ஏதாவது அரசுக்கு உதவி அளிக்கிறதா ?

(ஆ) இல்லையெனில் பொது நலன்களுக்காக இயங்கும் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து அரசு உதவி பெறும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) : ஆம். உலக வங்கியிடம் இருந்து குறைந்த வட்டியில் கடன் உதவிபெற்று குடிசைப்பகுதி மாற்று வாரியப் பகுதிகளில் தேவையான அடிப்படை வசதிகள் செய்துதரப்பட்டு வருகின்றன.

1981 மார்ச் 2]

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து உதவி பெற்று இப்படிப்பட்ட காரியங்கள் செயல்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளித்தார்கள். அதேபோல் உள்நாட்டிலே இருக்கிற உதவி அளிக்கக்கூடிய பல நிறுவனங்கள் உதவியை இந்த அரசு நாடி, இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்ய அரசு முன் வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ் இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. சு. பாலன் : அவைத் தலைவர் அவர்களே, சென்னை குடிசைமாற்று வாரிய பகுதிகளிலே சுகாதாரப் பணிகளை சரிவரச் செய்யவில்லை என்ற புகார் வந்துள்ளதா? அங்கே கழிவறை கட்டப்பட்டு அது சரிவர இயங்கவில்லையென்ற புகார் வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட இடங்களிலே அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு அவ்வப்போது புகார் வரும். உடனே அது கவனிக்கப்படும். இது தொடர்ந்து கொண்டே இருக்கக்கூடிய ஒரு விஷயம்.

திரு. கு. ரமணி : அவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள வீடுகளை சுகாதாரப் பாராமரிப்பு செய்வதற்காக வேண்டி வீடுகளை முனிசிபாலிட்டிகளுக்கு, நகராட்சிகளுக்கு அந்தப் பொறுப்பை ஒப்படைக்காத ஒரு மோசமான நிலை ஏற்பட்டு அங்கே கழிவு நீர் முதலியன அகற்ற வழியில்லாமல் இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டு வருகிறது. அதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அந்தப் பகுதிகளிலே சுகாதாரப் பராமரிப்புக்காக முனிசிபாலிட்டிக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு முடிவு எடுப்பதாக இருக்கிறது.

திரு, ராஜ்குமார் விஜயரெகுநரத தொண்டமான் : பேரவைத் தலைவர் அவர்களே, சில இடங்களில் உதாரணமாக மாம்பலம் போக் ரோடு போன்ற இடங்களில் நெருக்கமாக குடிசைகளை போட்டு, அந்த இடங்களிலே கார் கூட போகமுடியவில்லை. போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகிறது. சுகாதார நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வேறு இடங்களில் வீடு கட்டி சுகாதார நிலைமைகளை அபிவிருத்தி செய்ய அரசு முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கு என்ன செய்யவேண்டுமென்று சொல்கிறீர்கள் ?

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் உறுப்பினரைப் பார்த்து கேள்வி கேட்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியைத் திரும்பவும் சொல்லச் சொல்கிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவர் அவர்களே, மாம்பலம் போக் ரோடு போன்ற இடங்களில் மிகவும் நெருக்கமாக குடிசைகளை போட்டிருக்கிறார்கள், போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. சுகாதார பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அவர்களுக்கு சுகாதார அபிவிருத்தி செய்கிற வகையிலே வேறு இடங்களிலே வீடு கட்டித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே இருக்கக்கூடிய அன்-ஆதாரைஸ்ட் அட்மெண்ட்ஸ் போன்றவற்றை வெளியேற்றி இருக்கிறோம். மீதம் இருக்கக்கூடிய இடங்களில் ஆதரைஸ்ட் ஆக இருந்தால், அதாவது குடிசை பகுதி மாற்று வாரியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது, குடிசைமாற்று வாரியம் வேலை செய்யக்கூடிய இடமென்று இருக்குமென்றால் அதற்கான வேலைகளைச் செய்ய அரசு பரிசீலனை செய்யும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உலக வங்கியிலிருந்து இந்தச் சுகாதாரப் பணிகளுக்காக குறைந்த வட்டியிலே கடன் பணம் தரப்படுவதாக சொன்னார்கள். எந்த வட்டி வீதத்தில் பணம் பெறப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன் ? அடுத்து அதைத் தவிர வேறு ஏதாவது நிபந்தனைகளை உலக வங்கி விதித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது அன் ஆதரைஸ்டு என்று சொன்னார்கள். ஆனால் ஆதரைஸ்டாக கொடுக்கப்பட்டவை பற்றி 1½ ஆண்டு காலமாக கேட்கப்பட்டும் நிறைவேற்றப்படவில்லை. பொதுமக்களுக்கும்

1981 மார்ச் 2]

இடையூறாக இருக்கிறது, சுகாதார வசதிக்கு இடையூறாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிந்து உடனடியாக அது குறித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தனிக் கேள்வி போட்டால் ஆராய்ந்து சொல்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: என்னுடைய கேள்வி ஆதரைஸ்டு பற்றியது, அமைச்சர் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை, அன் ஆதரைஸ்டு என்று சொன்னார்கள். . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனிக் கேள்வி வேண்டுமென்று சொன்னதற்குப் பிறகு விளக்கம் வேண்டாம்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியப் பகுதிகள் இல்லாத இடங்களில் நகரங்களில் சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்காக குடிசை மாற்று வாரியம் இல்லையென்றால் நகராட்சிகள் மூலமாக நடவடிக்கைகள் எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பொதுவாக சுகாதாரத்தைக் கவனிப்பது உள்ளாட்சித் துறை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து உதவி என்பது பற்றி கேள்வி இருக்கிறது, அதைப் பற்றி ஒருவரும் கேட்கவில்லை.

குறைந்த அளவு ஊதியச் சட்டம்.

*வினா எண் 332— திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குறைந்த பட்ச கூலி சட்டம் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் அமுலில் இருக்கிறது ?

(ஆ) இல்லையெனில், காரணம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) : குறைந்த அளவு ஊதியச் சட்டம் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் அமுலில் உள்ளது.

LEGISLATURE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS